### தமிழ்நாட்டில்

# ‘மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைப்பு’ எனும் அரசின் அறிவிப்பு என்ன ஆனது?

## சட்டப்பேரவையில் — எ.வ.வேலு கேள்வி!



சென்னை, ஆக. 12-

தமிழ்நாட்டில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது எனும் அரசின் அறிவிப்பு குறித்து, சட்டப்பேரவையில் கழக உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவையில் அவர் குறிப்பிட்டதாவது:

இந்த அரசு என்பது மது கொள்கைக்கு எதிரான அரசு என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் பேரவைத் தலைவர் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புவது, இந்த 5 ஆண்டு காலங்களிலே நீங்கள் ஆண்டுக்காண்டு மதுக் கடைகளைக் குறைக்கப் போகிறீர்களா? அதை வெளிப்படையாக உங்களுடைய மானியக் கோரிக்கையில் இந்தந்த ஆண்டில், இந்தந்தக் கடைகளை நாங்கள் குறைபோம் என்று நீங்கள் அறிவிக்கப் போகிறீர்களா? நான் கேட்பதற்குக் காரணம் என்னவென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும், இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாக, இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்றெல்லாம் கிடையாது, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால், 717 கடைகளை ஏற்கெனவே குறைத்து விட்டோம் என்ற அறிவிப்பு இருக்கிறது. அது எந்தெந்த மாவட்டத்தில், எந்தக் கடையைக் குறைத்தார்கள் என்று அந்த மாவட்டத்தில் இருக்கிற யாருக்கும் தெரியவில்லை. நீங்கள் சொல்கிறீர்கள் number வரும், நாங்கள் online மூலமாக செய்திருக்கிறோம் என்கிற நிலைமையல்ல. Localலில் இருக்கிற எந்தப் பத்திரிகையிலும் இந்தக் கடைகளையெல்லாம் குறைத்துவிட்டோம் என்ற அறிவிப்பு இல்லை. அதுவும் தேவை. நீங்கள் சொல்வதைப்போல ஆண்டாண்டுக்கு நாங்கள் குறைக்கப் போகிறோம் என்பதை நீங்கள் இப்போது சொன்னாலும் சரி அல்லது உங்களுடைய மானியக் கோரிக்கையில் ஒரு வருடத்திற்கு இத்தனை கடைகளை நாங்கள் குறைக்கப்போகிறோம் என்று சொன்னாலும் சரி. இந்த அரசு அதற்கான முயற்சியை எடுக்கிறது என்று நாங்கள் எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடுகள்)

இவ்வாறு - பேரவையில் எ.வ.வேலு எம்.எல்.ஏ. அவர்கள் குறிப்பிட்டார்.

### தி.மு.க.வுக்கு எதிரான மனு தள்ளுபடி!

# கோவில் நிதியை கல்விக்குப் பயன்படுத்தலாம்!

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு!

சென்னை, ஆக.12-

கோவில் நிதியில் கல்லூரி துவங்க முந்தைய தி.மு.க. அரசின் உத்தரவை எதிர்த்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. கோவில் நிதியை கல்விக்கு பயன்படுத்தலாம் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கோவில் நிதியில் கல்லூரி துவங்க முந்தைய தி.மு.க. ஆட்சியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் சார்பில் சென்னை கொளத்தூரிலும், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோவில் நிதியில் திருச்செங்கோட்டிலும், பழனி தண்டாயுதபாணி கோவில் நிதியில் ஒட்டன்சத்திரத்திலும், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் சார்பில் விளாத்திகுளத்திலும் என, நான்கு இடங்களில் கல்லூரிகள் துவங்க அனுமதி அளித்து தமிழக உயர் கல்வித்துறை செயலாளர் கடந்த அக்டோபர் 6ஆம் தேதி அரசாணை பிறப்பித்தார்.

இந்த அரசாணைக்கு தடை விதிக்கக் கோரியும், அதை ரத்து செய்யக் கோரியும் சென்னையைச் சேர்ந்த டி.ஆர். ரமேஷ் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் இ. மனோகரன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்த போது, அறநிலையத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், கபாலீஸ்வரர் கோவில் நிதியை பயன்படுத்தி கொளத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரத்தில் கல்லூரிகள் அமைக்கப்பட்டு மூன்று பேட்ச் மாணவர்கள் படிப்பை முடித்து விட்டதாகவும், திருச்செங்கோடு மற்றும் விளாத்தி குளத்தில் கல்லூரிகள் இன்னும் அமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

### த.வெ.க. அரசின் மருத்துவத் திட்டங்கள்

# காப்பீட்டு நிறுவனத்திற்குச் சாதகமாகவும் - ஊழியர்களுக்குப் பாதகமாகவும் உள்ளது!

## ஓய்வுபெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றச்சாட்டு!

திருவாரூர், ஆக.12 –

த.வெ.க. அரசு தற்போது அறிவித்துள்ள மருத்துவ காப்பீடு திட்டங்கள் காப்பீட்டு நிறுவனத்திற்கு சாதகமாகவும் ஊழியர்களுக்கு பாதகமாகவும், இருப்பதாக ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

திருவாரூர் மாவட்ட ஓய்வு பெற்ற காவல் அலுவலர் நல சங்கத்தின் செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

கூட்டத்தில் பேசிய நிர்வாகிகள் இன்றைக்கு நாட்டு மக்கள் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு காவலர்களின் பங்கு மகத்தானது. ஆனால் நாட்டு மக்களுக்காக தங்களை அற்பணித்துகொண்டு இரவு பகல் பராமல் பணியாற்றும் காவலர்கள் பெறும் ஊதியம் என்பது மிகமிக குறைவானது. காவலர் பணி செம்மையாக அமைந்திடவும், அவர்களது குடும்பங்கள் நலனை பாதுகாத்திடவும் த.வெ.க. அரசு பல்வேறு சிறப்பு திட்டங்களை நடப்பு பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தவெக அரசு புதிதாக அறிவித்துள்ள மருத்துவக் காப்பீட்டு திட்டமானது ஓய்வு பெற்ற மற்றும் பணியில் உள்ள ஊழியர்களுக்கு பாதகமாகவும், காப்பீட்டு நிறுவனங்களுக்கு சாதகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவகாப்பீட்டு திட்டத்தில் ஊழல் முறைகேடு நடந்திருக்குமோ என ஐயம் ஏற்பட்டுள்ளதாகவும்,

மத்திய, மாநில அரசுகள் 8வது ஊதிய குழுவின் பரிந்துரையை அனைத்து ஓய்வூதியர்களுக்கும் பாகுபாடின்றி அமல்படுத்த வேண்டும்,குடும்ப பாதுகாப்பு நிதியை ரூ.1.5 லட்சமாக உயர்த்தி வழங்குவதோடு, பணியில் உள்ள காவலர்களின் ஊதியம் தொடர்பாக தவெக தேர்தல் அறிக்கையில் கூறியபடி அரசு சம்பள உயர்வு வழங்கவேண்டும்,

சட்டம் ஒழுங்கு பிரச்சனை யில்லாமல் இருந்திட காவல் நிலைய காவலர் பணியிடங்களை அதிகரிக்க வேண்டும், பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டு திட்ட பலன்கள் , இன்னுயிர் காப்போம் நம்மைகக்காக்கும் 48, இல்லம் தேடி மருத்துவம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டங்களைப் போல மக்களுக்கு பயன்தரும் உயிர்காக்கும் திட்டங்களை தவெக அரசு தொடர்ந்து செயல்படுத்தவேண்டும் என்பதே அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.



பாசறை முரசு வாசகர் வட்டம் சார்பில் பாசறை மு.பாலன் எழுதிய ‘சனநாயகமும் – சமத்துவமும்’ நூல் வெளியீட்டு விழா சென்னை பெரம்பூரில் நடைபெற்றது.மல்லை சி.ஏ.சத்யா நூலை வெளியிட முதல் பிரிதியை கழகத்தின் செய்தி தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் பெற்றுக் கொண்டார். இதில் முனைவர் மோ.பாட்டழகன், வழக்கறிஞர் குமார தேவன், மயிலை பாலு ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர்.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி ஏரியூர் ம.தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் முத்தையா தனது ஆதரவாளர்களுடன் அக்கட்சியிலிருந்து விலகி முன்னாள் அமைச்சர் – சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் முன்னிலையில் கழகத்தில் சேர்ந்தார். உடன் புலவர் சே.செவந்தியப்பன், சிங்கம்புணரி மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர் எஸ்.முத்துகுமார், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஏ.எல்.சந்திரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

